



**அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை**

| | |
|---|---|
| **வெளியிடு** | **ஐக்கிய அரபு அமிரக அரசின்**<br>**இஸ்லாமிய விவகார துறை**<br>(http://www.awqaf.gov.ae) |

| |
|---|
| **வெள்ளிக்கிழமை ஜுமாதியுல் அவ்வல் பிறை 10 ஹிஜ்ரி 1437**<br>**Friday of Jumada Al Awwal 10th Hijri 1437**<br>**19th February 2016** |

| | |
|---|---|
| **தலைப்பு:** | **எல்லாப்புகழும் இறைவனுக்கே!** |

| | |
|---|---|
| **தமிழில்** | **மௌலவி, அப்சலுள் உலமா**<br>**புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.**<br>**Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com**<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |

| |
|---|
| *இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்( ) மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.* |

| தலைப்பு: | எல்லாப்புகழும் இறைவனுக்கே! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். எண்ணற்ற பல கிருபைகளை வழங்குகிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(2:231)

وَاذْكُرُوا نِعْمَتَ اللَّهِ عَلَيْكُمْ وَمَا أَنزَلَ عَلَيْكُم مِنَ الْكِتَابِ وَالْحِكْمَةِ يَعِظُكُم بِهِ وَاتَّقُوا اللَّهَ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

“உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருட்கொடையையும், உங்கள் மீது அவன் இறக்கிய வேதத்தையும், ஞானத்தையும் சிந்தித்து (ஆராய்ந்து) பாருங்கள். அவன் இதனைக் கொண்டு உங்களுக்கு உபதேசிக்கின்றான். அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் நன்கறிவான் என்பதையும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்”

**தொழுகையாளிகளே**! எல்லாம் வல்ல இறைவன் நமக்களித்த கிருபைகளுக்காக அவனை புகழ்வது நன்றியுணர்வின் அடையாளமாகும். அவனுடைய அருளை எண்ணி மகிழ வேண்டும், அவனை உளமார போற்றவேண்டும். இறைவனுக்கு கீழ்படிவதின் முக்கியமானதோர் வழிமுறையாகும். ஒவ்வொரு தொழுகையின் ஆரம்பத்திலும் அல்ஹம்து ஸூராவை ஓதுகிறோம், அந்த ஸூராவின் தொடக்கத்திலேயே இறைவனை புகழும் சொற்றொடர் இருக்கிறது: (1:2)



www.sunnathwaljamath.com

الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

“எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! (அவன்தான்) அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான்”

படைப்பினங்கள் அனைத்தும் இறைவனுக்கு கட்டுப்பட்டு அவனை புகழ்வது மிக அவசியமாகும். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (30:18)

وَلَهُ الْحَمْدُ فِي السَّمَوَاتِ وَالأَرْضِ وَعَشِيًّا وَحِينَ تُظْهِرُونَ

“இரவிலோ, பகலிலோ, வானங்களிலும் பூமியிலுமுள்ளவை அனைத்தும் (போற்றி) புகழும் புகழனைத்தும் அல்லாஹ்வுக்குரியன. (ஆகவே, அந்த நேரங்களில் நீங்களும் அவனைப் போற்றி புகழ்ந்து கொண்டிருங்கள்)”

இறைவன் தன்னை தானே புகழ்ந்து திருமறையில் கூறுகிறான்: (28:70)

وَهُوَ اللَّهُ لاَ إِلَهَ إِلاَّ هُوَ لَهُ الْحَمْدُ فِي الأُولَى وَالآخِرَةِ وَلَهُ الْحُكْمُ وَإِلَيْهِ تُرْجَعُونَ

“அவன்தான் அல்லாஹ்; அவனைத்தவிர வணக்கத்திற்குரிய இறைவன் (இல்லவே) இல்லை. இம்மையிலும், மறுமையிலும் புகழ் அனைத்தும் அவனுக்கு உரியனவே! (மறுமையில் தீர்ப்பு கூறும்) அதிகாரமும் அவனுக்குரியதே! ஆதலால், (மறுமையில்) நீங்கள் (அனைவரும்) அவனிடமே கொண்டு வரப்படுவீர்கள்”

படைப்புகள் அனைத்தும் தூய இறைவனை துதி பாடிக்கொண்டே இருக்கின்றன. உலகில் உள்ள அனைத்தும் அவனை நினைவு கூர்ந்து கொண்டே இருக்கின்றன. எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (17:44)

تُسَبِّحُ لَهُ السَّمَوَاتُ السَّبْعُ وَالأَرْضُ وَمَنْ فِيهِنَّ وَإِنْ مِنْ شَيْءٍ إِلاَّ يُسَبِّحُ بِحَمْدِهِ وَلَكِنْ لاَ تَفْقَهُونَ تَسْبِيحَهُمْ إِنَّهُ كَانَ حَلِيمًا غَفُورًا

“ஏழு வானங்களும் பூமியும் இவற்றிலுள்ள அனைத்தும் அவனைப் புகழ்ந்து கொண்டே இருக்கின்றன. (இவற்றில்) ஒன்றுமே அவனைத் துதி செய்து புகழாமல் இருக்கவில்லை. எனினும், அவை துதி செய்து புகழ்வதை நீங்கள் அறிந்து கொள்வதில்லை. நிச்சயமாக அவன் பொறுமையுடையவனும், மன்னிப்புடையவனாகவும் இருக்கின்றான்”

பெரும் ஆபத்துகளில் இருந்து விடுபட்ட உடனேயே அல்லாஹ்வை புகழ்ந்து *அல்ஹம்துலில்லாஹ்* கூற வேண்டும் என்று இறைவன் தனது திருமறையில் நபி நூஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கட்டளையிடுகிறான்: (23:28)

فَإِذَا اسْتَوَيْتَ أَنْتَ وَمَنْ مَعَكَ عَلَى الْفُلْكِ فَقُلِ الْحَمْدُ لِلَّهِ الَّذِي نَجَّانَا مِنَ الْقَوْمِ الظَّالِمِينَ

“நீங்களும் உங்களுடன் உள்ளவர்களும் கப்பலில் ஏறி அமர்ந்து கொண்டதன் பின்னர் "அநியாயக்கார இந்த மக்களில் இருந்தும் எங்களை பாதுகாத்துக் கொண்ட அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்" என்று கூறுங்கள்”

நபி இப்ராஹீம் அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு இறைவனை புகழ்ந்ததை திருக்குர்ஆன் எடுத்துரைக்கிறது: (14:39)

الحَمْدُ لِلَّهِ الَّذِي وَهَبَ لِي عَلَى الْكِبَرِ إِسْمَاعِيلَ وَإِسْحَاقَ إِنَّ رَبِّي لَسَمِيعُ الدُّعَاءِ

“எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்குரியது; அவன்தான் இவ்வயோதிக(கால)த்தில் இஸ்மாயீலையும் இஸ்ஹாக்கையும் எனக்கு(ச் சந்ததிகளாக) அளித்தான். நிச்சயமாக என் இறைவன் பிரார்த்தனைகளை (கருணையுடன்) செவியுறுபவனாக இருக்கிறான்”

நபி தாவூத் மற்றும் ஸுலைமான் அலைஹிமஸ்ஸலாம் அவர்கள் பின்வருமாறு இறைவனை புகழ்ந்துள்ளார்கள்: (27:15)

الحَمْدُ لِلَّهِ الَّذِي فَضَّلَنَا عَلَى كَثِيرٍ مِنْ عِبَادِهِ الْمُؤْمِنِينَ

“தாவூதுக்கும், ஸுலைமானுக்கும் நிச்சயமாக நாம் (இம்மை மறுமையில் பயனளிக்கக்கூடிய) கல்வியைக் கொடுத்தோம். அதற்கு அவ்விருவரும் "புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே சொந்தமானவை. அவன்தான் நம்பிக்கை கொண்ட தன்னுடைய நல்லடியார்களில் பலரைவிட எங்களை மேன்மையாக்கி வைத்தான்" என்று கூறி (நன்றி செலுத்தி)னார்கள்”

தன்னை புகழ்ந்து கூறுமாறு தன்னுடைய நேசர் முஹம்மது நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் இறைவன் அறிவுரை கூறுகிறான்: (27:59)

قُلِ الْحَمْدُ لِلَّهِ وَسَلَامٌ عَلَى عِبَادِهِ الَّذِينَ اصْطَفَى

“ஆகவே, (நபியே!) புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்குரியனவே. தன்னுடைய அடியார்களில் அவன் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்களின் மீது "ஈடேற்றம் உண்டாவதாக" என்று கூறுங்கள்”

இறைவனோடு நெருக்கமாக இருக்கும் மலக்குமார்கள் அனைவரும் இறைவனை புகழ்ந்து கொண்டே இருக்கிறார்கள் என்பதை பரிசுத்த இறைவன் தன்னுடைய வேதத்தில் கூறுகிறான்: (39:75)

وَتَرَى الْمَلَائِكَةَ حَافِّينَ مِنْ حَوْلِ الْعَرْشِ يُسَبِّحُونَ بِحَمْدِ رَبِّهِمْ وَقُضِيَ بَيْنَهُم بِالْحَقِّ وَقِيلَ الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

“(நபியே! அந்நாளில்) மலக்குகள் தங்கள் இறைவனைப் புகழ்ந்து, துதி செய்தவண்ணம் "அர்ஷை" சூழ்ந்து நிற்பதை நீங்கள் காண்பீர்கள். அச்சமயம் அவர்களுக்கிடையில் நியாயமாகவே தீர்ப்பளிக்கப்பட்டு, "அகிலத்தார் அனைவரின் இறைவனான அல்லாஹ்வுக்கே எல்லா புகழும் சொந்தமானது" என்று (அனைவராலும் துதி செய்து) புகழ்ந்து கூறப்படும்”

**இறைவனை புகழும் நல்லடியார்களே**! *அல்ஹம்துலில்லாஹ்* சொல்வதற்கு எண்ணற்ற பல நன்மைகள் உள்ளன. இதனைப் பற்றி நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الْحَمْدُ لِلَّهِ تَمْلأُ الْمِيزَانَ، وَسُبْحَانَ اللَّهِ وَالْحَمْدُ لِلَّهِ تَمْلآنِ –أَوْ تَمْلأُ – مَا بَيْنَ السَّمَوَاتِ وَالأَرْضِ

“*அல்ஹம்துலில்லாஹ்* என்று சொல்வது மீஸான் தராசுத்தட்டை நிரப்பிவிடும், *ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹ்* என்று சொல்வது வானம் பூமி முழுவதையும் நிரப்பிவிடும்” (223 : مسلم)

இதன் பொருள் மிகவும் ஆழமானது, அதாவது இவற்றை ஓதுவதால் நன்மை அதிகரித்து அதனால் நாளை மறுமை நாளில் தராசுத்தட்டில் கனமாக இருக்கும். அந்த திக்ர், தஸ்பீஹ்களுக்கு ஈடாக நன்மை தரப்பட்டால் அந்த நன்மை வானம் பூமி அனைத்தையும் முழுவதுமாக நிரப்பிவிடும். காரணம் அந்த திக்ர் இறைவனின் தூய்மையான பெயரை கொண்டிருக்கிறது. அந்த திக்ரை செய்யும் போதும் நமது உள்ளத்தில் பணிவும், உள்ளச்சமும் நிறைந்திருக்க வேண்டும். (101/3 : شرح النووي على مسلم)

ஒரே ஒருமுறை *அல்ஹம்துலில்லாஹ்* சொன்னால் போதும் அவற்றைக்கூட மலக்குமார்கள் மிக துரிதமாக இறைவனிடம் எடுத்துச் செல்கிறார்கள். பின்வரும் ஹதீஸ் அதற்கு ஓர் அத்தாட்சியாக இருக்கிறது:

فَحِينَ رَفَعَ النَّبِيُّ صلى الله عليه و سلم رَأْسَهُ مِنَ الرُّكُوعِ وَقَالَ: سَمِعَ اللَّهُ لِمَنْ حَمِدَهُ. قَالَ رَجُلٌ وَرَاءَهُ: رَبَّنَا وَلَكَ الحَمْدُ حَمْدًا كَثِيرًا طَيِّبًا مُبَارَكًا فِيهِ. فَلَمَّا انْصَرَفَ قَالَ صلى الله عليه و سلم :مَنِ الْمُتَكَلِّمُ؟. قَالَ: أَنَا. قَالَ:رَأَيْتُ بِضْعَةً وَثَلاَثِينَ مَلَكًا يَبْتَدِرُونَهَا- أَيْ يَتَسَابَقُونَ إِلَيْهَا- أَيُّهُمْ يَكْتُبُهَا أَوَّلُ

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பின்னே ஒரு நாள் நாங்கள் தொழுது கொண்டிருந்தோம். அவர்கள் ருகூவிலிருந்து தலையை உயர்த்தியபோது *'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா'* எனக் கூறினார்கள். அவர்களுக்குப் பின்னாலிருந்த ஒருவர் *'ரப்பனா வ லகல் ஹம்து ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரகன் ஃபீஹி'* என்று கூறினார். தொழுது முடித்ததும் 'இந்த வார்த்தைகளைக் கூறியவர் யார்?' என்று நபிகள்

நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். அந்த மனிதர் 'நான்' என்றார். 'சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட வானவர்கள் இதைப் பதிவு செய்வதில் போட்டி போட்டதை நான் கண்டேன்" என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள் (799 :البخاري )

*அல்ஹம்துலில்லாஹ்* என்று சொல்வது மிகவும் வலிமையான துஆவாகும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

أَفْضَلُ الدُّعَاءِ الْحَمْدُ لِلَّهِ

"துஆக்களில் மிகவும் சிறந்தது *அல்ஹம்துலில்லாஹ்* (எல்லா புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே என்று சொல்வது) ஆகும் (3800 : وابن ماجه ، 3383 : الترمذي)

காரணம் துஆ என்பது அல்லாஹ்வை திக்ர் செய்வதாகும். அவனிடம் தேவைகளை சொல்வதாகும், கோரிக்கைகளை முன்வைப்பதாகும், இவை அனைத்தும் *அல்ஹம்துலில்லாஹ்* என்கிற சொல்லில் அடங்கியிருக்கிறது. இறைவனுக்கு நன்றி கூறுவதில் தலையாய சொற்றொடர் *அல்ஹம்துலில்லாஹ்*வாகும் (231/8 : تحفة الأحوذي)

இறைவனுக்கு மிகவும் பிரியமான சொல் அவனை புகழ்ந்து கூறும் சொல்லாகும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ أَحَبَّ الْكَلامِ إِلَى اللَّهِ: سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ

"இறைவனுக்கு மிகவும் பிரியமான சொல்: *ஸுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி* என்கிற சொல்லாகும் (4911 : مسلم)

இதனால்தான் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் தமது வாழ்நாளில் அடிக்கடி *அல்ஹம்துலில்லாஹ்* என்று கூறும் பழக்கத்தை கொண்டிருந்தார்கள். தனது நேரங்களை மிகவும் பலனுள்ள திக்ர்களில் கழித்துள்ளார்கள். தூங்கி எழுந்தவுடனே இறைவனை புகழ்ந்து திக்ர் செய்யும் வழமையை பின்பற்றினார்கள்.

الحَمْدُ لِلَّهِ الَّذِي أَحْيَانَا بَعْدَ مَا أَمَاتَنَا وَإِلَيْهِ النُّشُورُ

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் படுக்கைக்குச் செல்லும்போது, "அல்லாஹூம்ம பிஸ்மிக்க அமூத்து வ அஹ்யா' (அல்லாஹ்வே! உன் பெயர் கூறியே நான் இறக்கிறேன்; உயிர் வாழவும் செய்கிறேன்) என்று கூறுவார்கள். காலையில் (எழும்போது) 'அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஅத மா அமாத்தனா வ இலைஹிந் நுஷூர்' (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவன் எங்களை இறக்கச் செய்த பின்னர் எங்களுக்கு உயிரூட்டினான். மேலும் (மண்ணறையிலிருந்து வெளியேறி) அவனிடமே செல்ல வேண்டியதுள்ளது)" என்று கூறுவார்கள். (متفق عليه)

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (சாப்பிட்டு முடித்த பின்) தம் உணவு விரிப்பை எடுக்கும்போது “அல்ஹம்து லில்லாஹி ஹம்தன் கஸீரன் தய்யிபம் முபாரக்கன் ஃபீஹி” என்று பிரார்த்திப்பார்கள். (பொருள்: அதிகமான, தூய்மையான, வளமிக்க எல்லாப் புகழும் (நன்றியும்) அல்லாஹ்வுக்கே உரியது)” (2066: البخاري)

இவ்வாறு ஒவ்வொரு நிலையிலும் இறைவனை திக்ர் செய்வதின் சிறப்புகளை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்கு கற்றுக் கொடுக்கிறார்கள்:

إِنَّ اللَّهَ لَيَرْضَى عَنِ الْعَبْدِ أَنْ يَأْكُلَ الأَكْلَةَ فَيَحْمَدَهُ عَلَيْهَا، أَوْ يَشْرَبَ الشَّرْبَةَ فَيَحْمَدَهُ عَلَيْهَا

“ஒரு முறை உணவு உண்ட பின்னர் அதற்காக அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்கின்ற, அல்லது ஒரு முறை பானம் அருந்திய பிறகு அதற்காக அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்கின்ற அடியான் குறித்து அல்லாஹ் திருப்தி கொள்கிறான்” (2734 : مسلم )

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம்முடைய அன்றாட பணிகளை முடித்துவிட்டு இரவு ஓய்வெடுக்க செல்வார்கள். படுக்கையில் சாய்வதற்கு முன்னர் இறைவனை புகழ்ந்து திக்ர் செய்வார்கள். அவனுடைய கிருபைகளை எண்ணி நன்றி செலுத்துவார்கள். பின்வருமாறு அவர்கள் திக்ர் செய்வார்கள்:

الْحَمْدُ لِلَّهِ الَّذِي كَفَانِي وَآوَانِي، وَأَطْعَمَنِي وَسَقَانِي، وَالَّذِي مَنَّ عَلَيَّ فَأَفْضَلَ، وَالَّذِي أَعْطَانِي فَأَجْزَلَ، الْحَمْدُ لِلَّهِ عَلَى كُلِّ حَالٍ

“புகழனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே அவனே எனக்கு போதுமானவன், எனக்கு சிறந்த ஆதரவை தந்துள்ளான், எனக்கு உணவளிக்கிறான், எனக்கு பருக நீர் தருகிறான், என் மீது சிறந்த கிருபைகளை பொழிகிறான், அளவற்ற அருளை எனக்கு வழங்குகிறான். ஒவ்வொரு நிலையிலும் புகழ் அனைத்தும் அல்லாஹ்விற்கே உரியது” (5058 : أبو داود)

சோதனைகள் சூழந்த சமயங்களிலும், சிக்கலில் தவிக்கும் நேரங்களிலும், இக்கட்டான நிலைகளிலும் இறைவனை புகழ்ந்து திக்ர் செய்வது மிகவும் வரவேற்பிற்குரிய பாராட்டுதலுக்குரிய பண்பாகும். எந்த நிலையிலும் திக்ர் செய்தால் எண்ணற்ற பல நன்மைகள் கிடைக்கும். யாருக்கேனும் சோதனை ஏற்பட்டால் உடனடியாக அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும், மனம் சோர்ந்து விடாமல் அவனையே தொடர்ந்து திக்ர் செய்து வர வேண்டும். அப்படி செய்து வந்தால் இறைவனின் திருப்பொருத்தமும், மன்னிப்பும் கிடைக்கும். கடுமையான சோதனையிலும் எப்படி ஒருவனால் இறைவனை புகழ்ந்து திக்ர் செய்ய முடியும் என்பதை பின்வரும் ஹதீஸ் உணர்த்துகிறது. நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

إِذَا مَاتَ وَلَدُ الْعَبْدِ قَالَ اللَّهُ لِمَلاَئِكَتِهِ: قَبَضْتُمْ وَلَدَ عَبْدِي؟ فَيَقُولُونَ: نَعَمْ. فَيَقُولُ: قَبَضْتُمْ ثَمَرَةَ فُؤَادِهِ؟ فَيَقُولُونَ: نَعَمْ. فَيَقُولُ: مَاذَا قَالَ عَبْدِي؟ فَيَقُولُونَ: حَمِدَكَ وَاسْتَرْجَعَ. فَيَقُولُ اللَّهُ: ابْنُوا لِعَبْدِي بَيْتًا فِي الجَنَّةِ، وَسَمُّوهُ بَيْتَ الحَمْدِ

“ஓர் அடியாரின் குழந்தை இறந்து விடுகிறது அப்போது இறைவன் மலக்குமார்களை பார்த்து, “என்னுடைய அடியாரின் குழந்தையை கைப்பற்றி விட்டீர்களோ?” என்று கேட்பான். அதற்கு மலக்குமார்கள், “ஆம்” என்பார்கள். மறுபடியும் இறைவன், “அவருடைய ஈரக்குலையை அறுத்துவிட்டீர்களே?” என்று கேட்பான். அதற்கு மலக்குமார்கள், “ஆம்” என்பார்கள். மறுபடியும் இறைவன், “இப்போது என்னுடைய அடியார் என்ன சொல்கிறார்?” என்று கேட்பான். அதற்கு மலக்குமார்கள், “அல்ஹம்துலில்லாஹ் என்று உன்னை புகழ்ந்தார், மேலும் இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜியூன் என்று சொன்னார்” என்றார்கள். இப்போது அல்லாஹ் சொல்வான், “என்னுடைய அடியாருக்கு சுவனத்தில் ஒரு மாளிகையை கட்டுங்கள், அந்த மாளிகைக்கு ‘புகழின் மாளிகை’ என்று பெயர் வையுங்கள்” என்று உத்தரவிடுவான்.(1021 : الترمذي )

காரணம் உலகிலேயே மிகப் பெரிய சோதனை தமது குழந்தையை ஒருவர் பறிகொடுப்பதாகும். இந்த நிலையிலும் இந்த அடியார் இறைவனுடைய விதியைப் பற்றி சிறிதும் கோபம் கொள்ளவில்லை. அதற்கு மாற்றமாக முழுமனதோடு அவனை புகழ்கிறார், மேலும் இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜியூன் என்றும் சொல்கிறார். இதன் காரணமாகவே அல்லாஹ் அவருக்கு சொர்க்கத்தை கொண்டு போதுமாக்குகிறான். இந்த ஹதீஸை அறிந்து கொண்ட பிறகு எந்த பிரச்சனைகள் வந்தாலும் நம் மனம் சோர்வடைய கூடாது. கருணை நிறைந்த இறைவனை புகழ்வதை நிறுத்தி விடக்கூடாது. அல்லாஹ் அந்த நற்பாக்கியத்தை நம் அனைவருக்கும் தருவானாக!!!

**தொழுகையாளிகளே**! இறைவனுடைய கிருபைகளை எண்ணில் அடக்கிவிட முடியாது, எண்ணற்ற அருட்கொடையை வழங்கிக் கொண்டிருக்கிறான். இந்த பாக்கியம் தொடர்ந்து கிடைப்பதற்கு இறைவனை புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (16:18)

وَإِنْ تَعُدُّوا نِعْمَةَ اللَّهِ لاَ تُحْصُوهَا إِنَّ اللَّهَ لَغَفُورٌ رَحِيمٌ

“அல்லாஹ்வின் அரு(ள்க)ளை நீங்கள் கணக்கிட்டால் அவற்றை உங்களால் எண்ணிட முடியாது. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், பெரும் கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்”

எனவே யார் அல்லாஹ்வை முழுவதுமாக நம்பிக்கை கொண்டு, நிலையாக அவனை திக்ர் செய்து வந்து, பரந்த மனப்பானமையோடும் தியாக உணர்வோடும் வாழ்கிறாரோ நிச்சயம் அவருடைய உலக வாழ்க்கை சீராகிவிடும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ أَصْبَحَ مِنْكُمْ آمِنًا فِي سِرْبِهِ، مُعَافًى فِي جَسَدِهِ، عِنْدَهُ قُوتُ يَوْمِهِ؛ فَكَأَنَّمَا حِيزَتْ لَهُ الدُّنْيَا بِحَذَافِيرِهَا

“காலைப்பொழுதில் ஒருவர் தன்னுடைய வீட்டில் மிக நிம்மதியாக துயில் எழுகிறார், உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறார், அன்றைய தேவைக்கான உணவு அவரிடம் இருக்கிறது, என்றால் இவருக்கு இந்த மொத்த உலகமும் நிறைவாக வழங்கப்பட்டதை போன்றாகும்” ( : الترمذي 2346 ، وابن ماجه : 4141)

எண்ணற்ற பல நற்பாக்கியங்களை நாம் அனுதினமும் அனுபவித்து வருகிறோம், நம்மைவிட மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களை எண்ணி நாம் நல்லுணர்வு பெறவேண்டும். ஓர் அடியார் தன்னுடைய இறைவனை எல்லா நிலையிலும் புகழும் போதுதான் அந்த அடியான் சுபிட்சம் பெறுகிறார். அவனுடைய அருட்கொடைகளுக்கு சொல்லாலும் செயலாலும் நன்றி உணர்வோடு நடந்து கொள்ள வேண்டும். யா அல்லாஹ்! எங்கள் அனைவரையும் நன்றி செலுத்தும் அடியார்களாக நீ ஆக்கி வைப்பாயாக!! உன்னுடைய கிருபையை நாங்கள் புகழ வேண்டும்.

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.

**தொழுகையாளிகளே**! இறைவனை அதிகமாக புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும். பல வழிகளில் அவனை போற்றி புகழ வேண்டும். இறைவனை தொடர்ந்து புகழ்வதால் அவனுடைய கிருபைகளை மேலும் மேலும் அதிகமாக பெறலாம், அவனுடைய அருட்கொடைகளை அதிகமாக பெறலாம், மிகவும் நிம்மதியான மற்றும் அமைதியான மன நிலையை பெறலாம், இறைவனுடைய திருப்தியையும் அடைந்து கொள்ள முடியும். உலகியல் அடிப்படையில் நம்மை விட பின்தங்கி இருப்பவர்களை நாம் காணும்போது இறைவன் நமக்களித்த அருட்கொடைகளை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

انْظُرُوا إِلَى مَنْ هُوَ أَسْفَلَ مِنْكُمْ, وَلاَ تَنْظُرُوا إِلَى مَنْ هُوَ فَوْقَكُمْ, فَإِنَّهُ أَجْدَرُ أَلاَّ تَزْدَرُوا نِعْمَةَ اللهِ عَلَيْكُمْ

“(உலகாதாய அடிப்படையில்) உங்களை விட பின்தங்கி இருப்பவர்களை நீங்க கவனித்து பாருங்கள், உங்களை விட மேலே இருப்பவர்களை கவனிக்காதீர்கள். நிச்சயமாக இவ்வாறு நடந்து கொள்வதால் உங்களுக்கு இறைவன் வழங்கிய கிருபைகளை நீங்கள் குறைத்து மதிப்பிடாமல் இருப்பீர்கள்” (2963 : مسلم)

எனவே யார் இவ்வுலகில் அதிகமாக *அல்ஹம்துலில்லாஹ்* சொல்பவராக இருக்கிறாரோ அவர் மறுமை நாளில் மிகவும் சிறப்பு வாய்ந்த மதிப்பிற்குரிய நபராக இருக்கிறார்கள். அதிகமான


www.sunnathwaljamath.com

நன்மைகள் அவருக்கு கிடைக்கும். இம்ரான் இப்னு ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: நாளை மறுமை நாளில் அல்லாஹ்வுடைய சிறப்பிற்குரிய அடியார்கள் யாரெனில் அவனை தொடர்ந்து புகழ்ந்து கொண்டே இருந்தவர்கள் என்பதை நீ நன்றாக விளங்கிக் கொள்!" (20430 : أحمد)

எண்ணிலடங்காத கிருபைகளையும், அருட்கொடைகளையும் நமக்கு வழங்கியுள்ள இறைவனை நாம் எவ்விதம் நன்றியுணர்வோடு புகழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை இப்போது நம்மை நாமே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும். நம்மை மறு சீராய்வு செய்து அவனுடைய புகழை அனுதினமும் நினைவு கூற வேண்டும். நம்மையெல்லாம் நேரான பாதையாகிய இஸ்லாத்தில் கொண்டு வந்ததற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம், நிலையான மற்றும் நிம்மதியான அரசாட்சியை வழங்கியுள்ளான், நேர்மையான தலைமையை வழங்கியுள்ளான், உயர்தரமான வாழ்க்கைத்தரத்தை தந்துள்ளான், மற்றவர்களோடு ஒப்பிடும்போது நமக்கு வேறு பல எண்ணற்ற கிருபைகளை வழங்கியுள்ளான்.

யா அல்லாஹ் புகழனைத்தும் உனக்கே உரியது, ஆரம்பம் முதல் முடிவ வரை அனைத்து புகழும் உனக்கே உரியது.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு

அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!



www.sunnathwaljamath.com

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).